**OS.No**. 250/2017

**DW**1 – கோவிந்த ராஜ் த/பெ. வெங்கடபதி

நாள். 06.03.2023

<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. நான் டிப்ளமோ இன் மெக்கானிக்கல் இன்ஜீனிரிங் படித்தாக சொல்லியுள்ளேன் அதை எப்போது முடித்தேன் என்றால் 1985. எந்த கல்லூரில் படித்தேன் என்றால் சிஐடி ல் படித்தேன். டிப்ளமோ முடித்ததற்கான Certificate இன்னம் பெறவில்லை என்றால் ஆமாம். டிப்ளமோ Certificate பெறுவதற்கான முழுதகுதி பெறவில்லை என்றால் ஆமாம். டிப்ளமோ படிப்பு முடித்த பிறகு என்ன செய்தேன் என்றால் இரண்டு வருடம் வீட்டில் இருந்தேன். அதற்கு பிறகு பவானி அம்மாபேட்டையில் கிரிஷ்டல் நிட்டிங் பினிசர்ஸ் என்ற டையிங் யூனிட்டில் சூப்பர்வைசராக வேலை பார்தேன். அங்கு எத்தனை வருடமாக வேலை பார்த்தேன் என்றால் 6–7 வருடம். அந்த கம்பெனியில் எத்தனை பணியாளர் வேலை பார்த்தார்கள் என்றால் ஆரம்பத்தில் 30–40 பேர் இருந்தார்கள் நான் வெளியே வரும் போது 200 பேர் இருந்தார்கள். நான் பார்த்த பணியை தமிழில் சொல்லமுடியுமா என்றால் பனியன் சம்மந்தப்பட்ட தொழில்.

2. மேற்படி கம்பெனியில் பழனிசாமி மற்றும் கனேசன் வேலை பார்த்தார்கள் என்றால் ஆமாம். நான் வெளிநாட்டு கம்பெனியில் எந்த வருடம் வேலைக்கு சேர்ந்தேன் என்றால் 1999. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.த.சா.ஆ 1 கூட்டாண்மை ஒப்பந்த பத்திரத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர் மேற்படி பழனிசாமி மற்றும் கனேஷ் என்றால் ஆமாம். மேற்படி கூட்டாண்மை ஒப்பந்த பத்திரத்தில் 7 வது ஷரத்தில் நிறுவனத்தின் இரண்டு பங்குதாரர்களும் கூட்டாக வங்கிக்கணக்கை ஆரம்பிக்க வேண்டும் எனவும் காசோலை அதிகாரத்தை இருவரும் கூட்டாக பயன்படுத்தவேண்டும் எனவும் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆமாம். அதனை மாற்றியுள்ளார்கள். மேற்படி ஒப்பந்த பத்திரத்தில் வாதிகள் இருவரும் அவர்களுக்கு அனுகூலமாக மாற்றியுள்ளார்கள் உண்மையான ஒப்பந்த பத்திரத்தில் 2ம் வாதி தான் நிறுவனத்தின் கணக்கு வழக்குகளை கவனிப்பதாக குறிப்பிடப்பட்டுயிருந்தது. அதனை

தற்போது 1ம் வாதியும் 1ம் பிரதிவாதியும் கவனித்துக்கொள்ள வேண்டியது என மாற்றி அமைத்துள்ளார்கள். இன்டியன் ஓவர் சீஸ் வங்கியில் கொடுத்த ஒப்பந்த பத்திரத்தில் மேற்படி விவரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. கூட்டாண்மை நிறுவன பதிவாளரிடம் கொடுக்கப்படும் ஒப்பந்த பத்திரம் தான் உண்மையானது என்றால் இல்லை. மாற்றி கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு கூட்டாண்மை நிறுவன பதிவாளரிடம் கொடுக்கப்பட்ட ஒப்பந்த பத்திரத்தில உள்ள ஷரத்துக்கள் மாற்றப்பட்டுள்ளது என்பது குறித்தும் மோசடியான ஆவணம் என்பதும் குறித்தும் இதுவரை புகார் அளிக்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் பணிபுரிந்த வெளிநாட்டு கமிபெனி பெயர் என்ன என்றால் FAB–CON. என்னுடைய அலுவலகம் வெளிநாட்டில் இல்லை திருப்பூரில் தான் இருந்தது என்றால் இல்லை. வெளிநாட்டில் இருக்கம் என்னுடைய எம்பிலாயர் சொல்லும பணியை நான் திருப்பூரிலிருந்து மேற்கொள்வேன் என்றால் ஆமாம். FAB–CON கம்பெனி என்பது பனியன் பினிசிங் மிசின்களை தயார் செய்து விற்பணை செய்வது என்றால் ஆமாம். திருப்பூர் பனியன் தொழிலுக்கு பெயர் போனது என்றால் ஆமாம். திருப்பூரில் பனியன் தொழில்(நிட்டிங் காம்பாக்) செய்து தருபவருக்கு வேண்டுமான மிசின்களை வரவழைத்து சப்பளை செய்வது என்னுடைய வேலை என்றால் இல்லை. திருப்பூர் மற்றும் வெளிநாடுகளில் FAB–CON. கம்பெனி சப்பளை செய்த மிசின்களை நிறுவும் வேலையும் பழுது ஏற்பட்டால் சர்வீஸ் செய்யும் வேலையும் செய்து வந்தேன்.

4. பனியன் தொழில் சம்மந்தமான அனுபவம் எனக்கு உள்ளது என்றால் இல்லை மிசின்களில் சர்வீஸ் பற்றி தெரியும். மிசின்களில் எவ்வளவு பனியன் உற்பத்தி செய்ய முடியும் என்ற விவரம் தெரியும் என்றால் ஆமாம். FAB–CON கம்பெனி எனக்கேன குடியிருப்பு வசதி ஏற்படுத்தி தந்தார்களா என்றால் நான் குடியிருக்கும் வீடுதான். அப்போது நான் எங்கு குடியிருந்தேன் என்றால் கோவை ஸ்டேன்ஸ் காலனியில் குடியிருந்தேன். FAB–CON கம்பெனியில் வேலை பார்த்த போது வெளிநாட்டுக்கும் செல்ல வேண்டியிருந்ததால் என்னிடம் பாஸ்போர்ட் இருந்து இருக்கும் என்றால் ஆமாம். முதலில் பாஸ்போர்ட் எந்த விலாசம் குறிப்பிட்டு எடுத்தேன் என்றால் நம்பர் 30 கிழக்கு வீதி அக்கரகாரம் சிங்காநல்லூர். மேற்படி முகவரி யாருடையது என்றால் 2ம் வாதியுடையது. நான் மேற்படி விலாசத்தில் தங்கியிருந்தேனா என்றால் இல்லை. 1982 லிருந்து அவர்கள் வீட்டில் வருவதும்போவதுமாக இருந்தேன்.

1985 ல் 6 மாதம் அவர்கள் வீட்டில் தான்இருந்தேன். வங்கி கணக்கு மேற்படி விலாசத்தில் ஆரமபிக்கப்பட்டது. இருசக்கர வாகனத்திற்கான ஓட்டுநர் உரிமும் மேற்படி விலாசத்தில் ஆரமபிக்கப்பட்டது. பாஸ்டபோர்ட் விலாசத்தை எப்போது மாற்றினேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. திருமணத்திற்கு பின்பு மாற்றினேன் 1997 ல் திருமணம் ஆனது.

5. FAB-CON கம்பெனியில் எப்போது விலகினேன் என்றால் 2013 பிப்பரவரி மாதம். FAB-CON கம்பெனியில் வேலை பார்த்தபோது வேறு நிறுவன வேலை பார்த்தேனா என்றால் இல்லை கடைசியாக டிசம்பர் 2012 ல் ப்ளும் நிட் பினிச்சர்ஸ் க்கான வேலை பார்த்தேன். 2013 ஜனவரி ல் ப்ளும் நிட் பினிச்சர்ஸ் க்கான வேலை பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 26.6.2012 லிலேயே கோவிந்த ராஜ் அன்கோ என்ற பெயரில் தனிபர் ஸ்தாபனத்தை 3 ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவன தொழில் விலாசத்தில் ஆரம்பித்தேன் என்றால் இல்லை 2 ம் வாதி தான் ஆரம்பித்தார். கோவிந்த ராஜ் அன்கோ என்பது தனிபர் நிறுவனம் என்றாலும் அதற்கு நான் தான் விண்ணப்பம் செய்து உரிமம் பெறுவதற்கான படிவம் தாக்கல் செய்யப்படவேண்டும் என்றாலும் சரிதான். அதற்கான விண்ணப்பங்களை நான் தான் தாக்கல் செய்தேன் என்றால் லோகநாதன் சொன்னதால் தாக்கல் செய்தேன். அவ்வாறு லோகநாதன் சொல்லிதான் கோவிந்தராஜ் அன்கோ தனிநபர் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட என்ற விவரத்தை எனது அசல் வழக்கு எண் 250/17 ல் எதிர் வழக்குரையிலும் பிரமாண வாக்கு மூலத்திலும் நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 470/18 ல் பிராதிலும் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

6. திருப்பூரில் FAB-CON கம்பெனியில் எத்தனை மிசின்களை சர்வீஸ் செய்து இருப்பேன் என்றால் 28 க்கு மேல் இருக்கும். நான் அவ்வாறு சர்வீஸ் செய்த கம்பெனிகள் பனியன் தயார் செய்து விற்பனை செய்த கம்பெனிகள் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் பி.த.சா 5 ஆவணம் மாணிக்கம் முதன்மை மேலாளர் ஸ்டேட் பாங் ஆப் இந்தியா Recovery Branch coimbatore என்ற விலாசத்தை கொண்டுள்ளது என்றால் சரிதான். பி.த.சா 5 ஆவணம் நான் முழுவதும் படித்துள்ளேன் என்றால் படித்துள்ளேன். மேற்படி கடிதத்தில் 26.12.2013 மற்றும் 17.6.2014 தேதிகளில் நான் 3 ம் பிரதிவாதி கூட்டாண்மை நிறுவன பங்குதாரர் இடையே ஏற்பட்ட மனகசப்பு காரணமாக வெளியில் இருக்கிறேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்

வெளியேறிவிட்டேன் என தான் உள்ளது. மேற்படி கடித நகல் அனைத்து அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது.எனது பெயர் மற்றும் விலாசம் மற்றம் எனது மனைவியின் பெயர் மற்றும் விலாசம் குறிப்பிட்டு எனக்கு நேரடியாக அனுப்பப்படவில்லை என்றாலும் கடித நகல் மட்டும அனுப்பப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின் படி ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

M MEKALA MYTHILI

Digitally signed by M MEKALA MYTHILI
Date: 2023.03.06 19:02:48 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.